## வாரியபொல பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 10 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வாரியபொல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 70,000 தொகையான கல்கந்தே ஹேனவத்தை நிலையான சொத்தின் கீழ் காட்டப்படவில்லை. | நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பரீட்சித்து கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 28 ஆம் திகதி சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 558,246 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் கத்திரியாவ மருத்துவ நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 64,500 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் கணக்கு வைக்கப்படவில்லை. | நன்கொடையாக மற்றும் கொள்வனவு செய்யப்பட்டவைகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது இந்தத் தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரமான மீதிக்கும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 155,347 | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரியாக | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது இந்த வேறுபாடுகளை சரிசெய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| தொகையான காணப்பட்டது. | இணக்கமின்மை | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை. | ரூபா 446,560 தொகை செலவில் 03 வாகனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பழுது பார்த்தல்களுக்காக கராஜ் விலைகளின் நியாயமான தன்மை தகைமை பெற்ற இயந்திர பொறியியலாளர் அறிக்கை பெறப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தாமத தவறினாலும் புதிய உத்தியோகத்தரின் அறியாமையாலும் ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்படாதிருக்க கண்காணிக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,100,312 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,388,022 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 5,546 | 6,556 | 5,957 | 599 | 5,169 | 6,619 | 6,065 | 555 |
| (ii) | வாடகை | 10,360 | 11,050 | 11,028 | 21 | 9,889 | 10,605 | 10,603 | 2 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,247 | 1,109 | 1,109 | - | 772 | 1,189 | 1,189 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 33,485 | 39,362 | 38,607 | 755 | 168,084 | 214,641 | 177,085 | 36,750 |
| | மொத்தம் | 50,638 | 58,077 | 56,701 | 1,375 | 183,914 | 233,054 | 194,942 | 37,307 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 478,683 தொகையான ஆதன வரி நிலுவையில் ஒரு வருடத்தை விட மேற்பட்ட மீதி ரூபா 237,614 ஆகும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அந்த சகல ஆதனங்களையும் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரதான பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,258,518 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 26,149,299 ஆகும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஒரு விடயத்திற்காக மாத்திரம் உப விதி விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,000,000 தொகையான ஒரம்பூவ கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக 2019 ஏப்ரல் 03 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 03 மாதங்களுக்குள் உரிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண குறித்தொதுக்க நிதிஏற்பாட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 2,000,000 தொகையான நிதி ஏற்பாடு கிடைக்கும் வரையில் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டமையினால் சபை நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்வதன் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டமையால் அந்த வேலைப்பகுதியை ஆரம்பிப்பதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிந்துள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் 09 இலக்குகள் காணப்பட்ட போதிலும் அதற்குரிய குறிகாட்டிகள் இனங்காணப்படவில்லை. மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறை வேற்றுவதற்காக ரூபா 20,092,631 தொகை செலவில் 03 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு உள்ள ரூபா 41,406,228 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 3,023,778 தொகையினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### 3.3.1 ஊழியர் வெற்றிடமும் மிகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டாம் நிலையின் பதவிகளில் 05 வெற்றிடங்களும் ஆரம்ப பதவிகளில் 15 மிகையும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை ஊழியர்களை முறைமைப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டாம் நிலைப் பதவிகளின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப பதவிகளில் 15 மிகையாகக் காணப்படுபவை, 25/2014 சுற்றறிக்கையின் கீழ் சேர்க்கப்பட்டு அவற்றிக்கு அங்கீகாரம் கிடைத்திருக்காத பதவிகளாகும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பேருந்து நிலைய கீழ் மாடியில் இலக்கம் 01 கடை வாடகையாளரால் ரூபா 225,000 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அந்தக் கடையின் வாடகை ரூபா 8,000 ஆக இருந்த போதிலும் ரூபா 6,000 மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எனது 2019.04.10 ஆம் திகதிய 04/02/109/19 ஆம் இலக்க கடிதத்தில் மதிப்பீட்டை உள்ளடக்குவதற்காக பிரதான மதிப்பீட்டாளரிடம் கோரப்பட்டுள்ளது. |

## 3.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவைத் தேவைக்காக ஆலோசனைப் பொறியியலாளராக பொறியியல் சேவையின் 03 உத்தியோகத்தர்களுக்கு பிரதம செயலகத்தினால் 2008 மே 06 ஆம் திகதிய வ/பி.செ/3/1/2/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெற்றுச் சென்றதும் அந்த படியை பெற முடியுமென குறிப்பிடாதிருக்கும் போது 2018 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பமடாமல் தற்போது வரையிலும் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தருக்கு செயற்திட்டத்தின் திட்டங்களை தயாரிப்பதற்காக ஆலோசனை பொறியியலாளர் படியாக ரூபா 809,168 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரதம செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் மிகுதி செயற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓய்வு பெற்ற பொறியியலாளரின் சேவையைப் பெற்றுக்கொள்வதை கைவிடுவதற்கு எந்தவொரு கட்டளையும் பிரதம செயலாளர் வழங்கியிருக்கவில்லை. ஏங்களால் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர் மற்றும் ஆலோசனைப் பொறியியலாளாக செயற்பட்டிருந்தமையால் அவரின் சேவை தொடர்ச்சியாக பெறப்பட்டதை குறிப்பிடுகின்றோம். |
| (ஆ) | வடமேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவைத் தேவைக்காக ஆலோசனைப் பொறியியலாளராக பிரதம செயலகத்தில் பெயர் குறிப்பிடாத பொறியியலாளருக்கு ரூபா 98,736 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரதம செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் மிகுதி செயற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த பொறியியலாளர் தகைமை பெற்ற பொறியியலாளர் ஆனமையால் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அந்த சேவையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததை குறிப்பிடுகின்றோம். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.6.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதம செயலாளரின் அலுவலகத்திற்குரிய ரூபா 458,163 பெறுமதியான கெப் வண்டியைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | பிரதம செயலாளரின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.7 பெறுகை

### 3.7.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 03 மாடிகளையுடைய கட்டுபொத்த பல்நோக்குக் கட்டிடத்தின் 02 மாடியை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 47,321,534 பெறுமதியில் 2017 நவம்பர் 20 ஆந் திகதி முதல் நடைமுறையில் போதாத ஒரு மாத காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 சனவரி 08 வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்படவில்லை. | உடன்படிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிர்மாணத்திற்கான நிதிஏற்பாடு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மூலமே வழங்கப்பட்டிருந்தது. நிதிஏற்பாடு 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டமையினால் உடன்படிக்கைக் காலத்தை அவ்வாறு குறைவாகக் குறிப்பிட வேண்டியிருந்ததுடன் அது நடைமுறைக்கு பொருந்தாதிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். |